

### பி. ராமன்
கூடுதல் செயலாளர் (ஓய்வு)
கேபினெட் செகரட்டேரியட்

# பயங்கரவாதப் பிரச்சினை...



பிரதமர் மன்மோகன் சிங், சௌதி அரேபியா சுற்றுப்பயணத்தின்போது அந் நாட்டுத் தலைவர்களிடம் பயங்கரவாதப் பிரச்சினை பற்றிப் பேசியுள்ளதாகத் தெரிகிறது. குறிப்பாக இந்தியாவிற்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் தொடர்ந்து ஊக்குவித்து வருவதை எடுத்துக் காட்டியுள்ள பிரதமர், பாகிஸ்தான் மண்ணில் இருந்து இந்தியாவிற்கு எதிராகச் செயல்படும் தீவிரவாதக் குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்க பாகிஸ்தானை வற்புறுத்தும்படி சௌதி தலைவர்களிடம் கூறியிருக்கிறாராம்.

பாகிஸ்தான் போன்றே சௌதி அரேபியாவும் பயங்கரவாதத்தில் இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது! உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் அல்கொய்தா தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கையை அந்நாடு எடுத்துள்ளது. ஆனால் வெளிநாடுகளில் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் வஹாபி அமைப்புகள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்தே வந்திருக்கிறது. இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட பல நாடுகளில் செயல்படும் தீவிரவாத இயக்கங்களுக்கு சௌதி நாட்டில் தர்ம காரியம் செய்யும் நிறுவனங்கள் சிலவற்றில் இருந்துதான் பணம் போகிறது. உலக நாடுகள் இது மாதிரி பயங்கரவா தத்திற்கு நிதி உதவியளிக்கும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி சௌதி அரேபியாவை வலியுறுத்தியுள்ளன. ஆனால், இது தொடர்பாக அந்த நாடு எடுத்துள்ள நடவடிக்கைகள் எதுவும் திருப்திகரமானது இல்லை.

ஆகவே, பாகிஸ்தானில் இருந்தோ, பங்களாதேஷிலிருந்தோ இந்தியாவிற்கு எதிராக வரும் தீவிரவாதச் செயல்களைத் தடுக்க சௌதிஅரேபியாவின் உதவியை இந்தியா நாடுவது என்பது வீண் முயற்சி! பாபர் மசூதி இடிக்கப்பட்டதிலிருந்தே இந்தியாவிலும், சௌதி அரேபியாவிலும் உள்ள 'ஜிகாதி தீவிரவாதிகளுக்கு' இடையேயான உறவு பற்றிய நீண்ட கால வரலாறு இருக்கிறது. பாபர் மசூதி இடிப்பு தினத்தின் ஓராண்டு நிறைவையொட்டி பல ரயில்வே ஸ்டேஷன்களில் டிசம்பர் 1993ல் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. அந்த குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியதில் 'சிமி' என்ற அமைப்பிற்குத் தொடர்பு இருப்பதாக சந்தேகத்தின் பேரில் அப்போது பிடிபட்ட தீவிரவாதி ஒருவன் கூறியிருந்தான். 1980களில் அந்தச் சிமியின் தலைவராக இருந்த சி.ஏ.எம். பஷீர், பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் இருக்கும் ஜமாத்-ஈ-இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்பிடம் பயிற்சி பெற்றார் என்றே குறிப்பிட்டிருந்தான். பல மாநிலங்களில் தேடப்பட்டு வரும் பஷீரை இது வரை பிடிக்க முடியவில்லை.

தற்போது 48 வயதை எட்டியிருக்கலாம் என்ற கருதப்படும் பஷீர், கேரள மாநிலத்தில் உள்ள பரம்பயம் என்ற பகுதியைச் சேர்ந்தவன். கொச்சிக்கு அருகில் உள்ள அலுவாவில் இருக்கும் யூனியன் கிறிஸ்துவக் கல்லூரியில் படித்த பஷீர், புது டெல்லி சப்தர்ஜங் விமான நிலையத்தில் சில காலம் பணியாற்றியவன். இங்கிருந்து வெளியேறி பயங்கரவாதத்தைக் கையிலெடுத்து இப்போது தலைமறைவாகியிருக்கிறான். இதற்கு பிறகு வந்த தகவல்படி பஷீர் சௌதி அரேபியாவில் வீடு எடுத்து தங்கிக்கொண்டு, அங்கிருந்து இந்தியாவில் 'சிமி' இயக்கத்தின் நடவடிக்கைகளை வழி நடத்துவதாகவும், இதே சிமியின் கிளைகளை மற்ற அரபு நாடுகளில் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது. முஸ்லிம் டெவலப்மென்ட் ஃபோர்ஸ் (எம்.டி.எஃப்.) என்று புதிய அமைப்பு ஒன்றையும் இந்த பஷீர் சௌதி அரேபியாவில் ஆரம்பித்துள்ளதாகவும் தகவல். இதே மாதிரி அபு அப்தல் அஷீஸ் என்ற தீவிரவாதியின் போஸ்னியா நாட்டு செயல்பாடுகள் குறித்து செய்திகளும் வந்துள்ளன. அவ்வப்போது அவனுடைய பத்திரிகைப் பேட்டிகளும் வெளிவந்துள்ளன. இவனுடைய ஆதரவாளர்கள் எல்லாம் பெரும்பாலும் வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியன் முஸ்லிம்களாக இருக்கிறார்கள் என்றும், இவர்கள் போஸ்னியன் ஆர்மியின் ஏழாவது பட்டாலியனைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்கள் வெளியானது.

பிறகு 1994 வாக்கில் லஷ்கர்-ஈ-தொய்பாவின் கான்ஃபரன்ஸ் ஒன்றில் தோன்றிய அபு அப்தல் அஷீஸை அந்தக் கூட்டத்தில் 'சௌதி அரேபியாவில் வாழும் இந்தியன் முஸ்லிம்' என்றே அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இந்த அஷீஸ் கிறிஸ்துவர்களுக்கு எதிரான போரில் போஸ்னியா முஸ்லிம்களுக்கும், இந்தியாவிற்கு எதிராகப் போராடும் காஷ்மீரிகளுக்கும் பெரும் உதவி செய்து கொண்டிருக்கிறார் என்